REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: மாசி 27உ வெள்ளி (11—3—55) ★ ★ வெளியீடு: மாசி 28உ சனி (12—3—55) [இதழ் 230

மொழி பற்றிய புள்ளிவிபரங்கள்

சேகரிக்க மத்திய அரசாங்கம் கோரிக்கை

மத்திய பிரதேச மாநிலத்தில் உள்ள எல்லா மாவட்டங்களிலும், குறிப்பாக பல மொழி வழங்கும் எல்லா தாலுக்காக்களிலும், கிராமவாரியாக வழங்கும் மொழி பற்றிய புள்ளி விபரங்களை சேகரிக்குமாறு, மத்திய அரசாங்கம் கோரியுள்ளதாம்.

இதற்காகச் செலவாகும் என்று மதிப்பிடப்படுகிற சுமார் ரூ. 75,000 மாநில, மத்திய அரசாங்கங்கள் சமமாகப் பங்கிட்டுக் கொள்ளும் என்று கூறப்படுகின்றது.

இந்தி அறியாத பிற மொழியினரை ஒடுக்க!

இந்தி முகமூடியில் — இந்தியப் பேரரசின் சதி!

ஐ.ஏ.எஸ். தேர்வுக்கு இந்தி திணிப்பு

1960-ம் ஆண்டிலிருந்து அவதி ஆரம்பமாம்

திருச்சி, மார்ச் 8—

"1960 முதல் இந்திய நிர்வாக சர்விஸ் (ஐ. ஏ. எஸ்.), மற்றும் இதர எல்லா அகில இந்திய சர்விஸ்களுக்கான பரீட்சைகள் எல்லாம், இந்தி மொழியிலேயே நடத்தப்பட வேண்டும்," என்று 'யூனியன் பப்ளிக் சர்விஸ் கமிஷன்' யோசனை தெரிவித்துள்ளதாம்!

பல்கலைக் கழகங்களின் மத்திய போர்டுக்கு இது பற்றி, 'கமிஷன்' கடிதம் எழுதியுள்ளதாம்.

போதனுமொழி ஒரு அடிப்படை முக்கியத்துவம் பெற்ற பிரச்சினையாதலால் எல்லா பல்கலைக் கழகங்களையும் மேற்கண்ட விஷயம் குறித்து கருத்தறிவிக்கக் கோரியுள்ளதாம்.

பல்வேறு துறைப் பாடங்களிலும், இந்தி மொழியில் தேவையான புத்தகங்கள் உள்ளனவா? ஐ. ஏ. எஸ், மற்றும் இதர பரீட்சைகளில் விடையளிக்க, மாணவர்கள் இந்தி பிரச்சார சபைகளில் பெறும் 'இந்தி மொழி அறிவு' போதுமானதா? — என்பதையும் தெரிவிக்குமாறு, அந்தப் போர்டு, பல்கலைக் கழகங்களைக் கேட்டுள்ளதாம்.

சமமாக நடத்துக!

"மதுபானத்திற்கு 'பெர்மிட்டு'கள் வழங்கும் பிரச்சினையில், இந்தியாவில் நீண்டகாலம் தங்கும் அன்னியரையும், இராணுவத்தினரையும் இதர இந்தியக் குடிமக்களைப் போலவே சமமாக நடத்த வேண்டும்" என்று மதுவிலக்கு விசாரணைக் குழுவிடம் பம்பாய் அரசாங்கம் தெரிவித்திருக்கிறதாம்.

நாணயச் செலாவணி முறை மாறுகிறது?

புதுடில்லி, மார்ச் 10—

நாணயச் செலாவணியை சதவிகிதப்படுத்தும் திட்டம் ஒன்றை திட்டக் குழு பரிசீலித்துக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

இதன்படி, ஒரு ரூபாய்க்கு 10 அணாவும், ஒரு அணாவுக்கு 10 பைசாவும் இருக்கும் என்று தெரிகிறது.

1953-ல், மக்கள் சபையில் இது பற்றி தனி நபர் மசோதா ஒன்று வந்தது; ஆனால், அப்போது இது நிராகரிக்கப்பட்டது.

பின்பு, இந்திய அரசாங்க வர்த்தக, தொழில் இலாகா நியமித்த விசாரணைக் குழு ஒன்று இந்த நாணயச் செலாவணியை இப்படி மாற்றுவதில் உள்ள பொருளாதார வர்த்தக பிரச்சினைகளை ஆராய்ந்தது. அது தாக்கல் செய்த திட்டமே இப்போது திட்டக் குழுவின் பரிசீலனையில் இருப்பதாகும்.

இந்தத் திட்டம் ஏற்றுக்கொள்ளத் தக்கது என்று காணப்பட்டால், இந்தப் புதிய நாணய முறை இரண்டாம் ஐந்தாண்டுத் திட்ட ஆரம்பத்தின்போதே புகுத்தப்படலாம் என்றும் கூறப்படுகிறது.

ஆசியாவுக்கு அமெரிக்க உதவி

தூர கிழக்கு நாடுகளுக்கு அடுத்த நிதி ஆண்டில் உதவியளிக்க 120 கோடி டாலர் ஒதுக்குமாறு அமெரிக்கத் தலைவர் ஐசனோவர் அமெரிக்க சட்டசபையைக் கேட்பதற்கு எண்ணியுள்ளாராம். நடப்பு ஆண்டு உதவித் தொகையைவிட இது 20 கோடி டாலர் அதிகமாம்.

இந்தோ—சீனாவுக்கும்!

"இந்தோ—சீனாவுக்கு ஜூன் 30-ந் தேதியுடன் முடியும் நடப்பு நிதி ஆண்டில் மொத்தம் ஒரு கோடி டாலர் நிதி உதவி அளிக்கப்படும்," என்று அமெரிக்கா அறிவித்துள்ளதாம்.

மாலங்கோவ் உயிருக்கு ஆபத்தாம்!

அமெரிக்கப் பத்திரிகையில் செய்தி

பிலடெல்பியா, மார்ச் 9—

'மாலங்கோவுக்குத் தொல்லை' என்ற தலைப்பில், 'பிலடெல்பியா என்குயரர்' என்ற பத்திரிகை சமீபத்தில் எழுதியுள்ள தலையங்கத்தின் சுருக்கமாவது:—

"கிரெம்லினில் பதவியிலிருந்த தலைவர்கள் பதவியிழந்த பிறகு தொல்லைகளை, உடனேயோ அல்லது சிறிது தாமதித்தோ அடைந்தனர். ஸ்டாலின் மரணத்திற்குப் பிறகு சோவியத்தின் முப்பெரும் தலைவர்களில் ஒருவராக இருந்த பெரியாவை மாலங்கோவ் பதவியிலிருந்து நீக்கிவிட்டார். பிறகு பெரியா இறந்துவிட்டார்.

"மாலங்கோவுக்கும் இத்தகைய முடிவு ஏற்படலாம். 'உண்மையை வெளியிட முயற்சித்தார்,' என்பதுதான் அவருடைய குற்றம். 'நீர்வளிக்குண்டை உபயோகித்து நடைபெறும் போர், ரஷ்யா உள்பட நாகரீகத்தையே அழித்து விடும்' என்று ஓராண்டிற்கு முன் அவர் கூறினார்.

"ஆனால், இப்பொழுதுள்ள ரஷ்யத் தலைவர்கள் நினைப்பது வேறு; 'அணு யுத்தம் மூலம் ஏகாதிபத்ய நாகரீகம்தான் அழியுமென்றும், அதனால் கம்யூனிஸ்டுகள் பாதிக்கப்பட மாட்டார்கள்,' என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

"அணுகுண்டு, நீர்வளிக்குண்டு ஆகியவைமூலம் தமக்கு ஆபத்து ஏற்படாது என கம்யூனிஸ்டுகள் நினைப்பதாக நம்புவதற்கில்லை; அது அவர்களுடைய பிரசாரத்தில் ஒரு மாற்றமாக இருக்கக்கூடும்; எனவே, உண்மையாக இல்லாவிட்டாலும், கொள்கையளவில் 'குற்றம்' செய்தவரான மாலங்கோவ், இதற்காகத் தம் உயிரையும் இழக்க நேரிடலாம்."

தடை!

அரசாங்கத்தின் முன்அனுமதியின்றி குரங்குகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடாதென்று இந்திய அரசாங்கம் தடைவிதித்துள்ளது.

நாகர்களின் தனி நாடு கோரிக்கை

அசாம் முதன் மந்திரி ஓலம்!

ஷில்லாங், மார்ச் 10—

"நாகர்களின் தனி நாடு கோரிக்கை பிரச்சினைக்கு அசாமிற்கு வெளியில் உள்ள மக்களும், அசாமிலேயே உள்ள சில கட்சியினரும் ஆதரவு தராமலிருந்தால், எப்போதோ பரிகாரம் கண்டிருக்க முடியும்," என்று, அசாம் முதன் மந்திரி பிஷ்ணுராம் மெஹ்தி, சட்டசபையில் பேசியிருக்கிறார்.

"அசாம் மலைகளில் வாழும் மக்கள் நானாவிதமானவர்கள்; அவர்கள் பேசும் எல்லா மொழிகளையும் புரிந்துகொண்டு அவர்களுடன் தொடர்பு கொள்வதென்பது சாத்தியமற்றதாயிருக்கிறது; அதே நேரத்தில், கிளர்ச்சிக்காரர்கள், இந்த நிலையை நன்றாக பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

"நாகர்களின் தனி நாடு கோரிக்கை பிரச்சாரத்திற்கு, சர்க்காரின் பதில் எல்லாம், நாகர்களிடையே க்ஷேமகல வேலைகளை மேற்கொள்ளுவதுதான்" என்றும் முதன் மந்திரி சட்டசபையில் அறிவித்திருக்கிறார்.

இந்தியத் தூதுவரின் அலுவலகம் தூங்குவதாகப் புகார்!

நடப்பு ஆண்டில் கோதுமையும், பார்லியும் பயிராகிவரும் பிரதேசத்தின் மொத்த விஸ்தீரணம் 1953-54-ல் இருந்ததைக்காட்டிலும் 10 சதவிகிதம் அதிகமாகும்.

தலைமன்னாரில் இந்தியர்கள் பட்டினிப் போர்!

6-மாதங்களாக நிறுத்திவைக்கப்பட்டிருப்பதை எதிர்த்து நடவடிக்கை

கொழும்பு, மார்ச் 10—

தலைமன்னாரில் இந்தியாவிற்கு அனுப்பப்படுவதற்காக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள 66 இந்தியர்களில் 15 பேர் இன்று உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ளனர் என்று தெரிகிறது.

அவர்கள் நீண்டகாலமாக, அங்கு, தகுந்த காரணங்கள் எதுவும் இன்றி தொடர்ந்து நிறுத்திவைக்கப்பட்டிருப்பதை எதிர்த்தே மேற்கண்ட நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளார்கள் என்று கூறப்படுகிறது.

அவர்கள் இந்தியாவிற்குச் செல்ல முடியாதவாறு இலங்கையில் உள்ள இந்தியத் தூதுவர் அலுவலகத்தார் அவர்களது போக்கு-வரத்து தஸ்தாவேஜுக்களை நிறுத்தி வைத்துள்ளனராம்.

இந்த தஸ்தாவேஜுக்கள் கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டதினால், உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ள சிலர், கடந்த ஆறு மாதங்களாக அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாகவும் புகார் செப்பியுள்ளனர்.

முன்பொரு முறை, இதே காரணத்திற்காக இந்தியர்கள், இம் மாதிரி தலைமன்னாரில் உண்ணாவிரதமிருந்தனர். இப்பொழுது இரண்டாம் முறையாக உண்ணாவிரதம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மன்னாரிலிருந்து கிடைத்துள்ள ஒரு அறிக்கை, தங்களது போக்கு-வரத்து பிரயாண, தஸ்தாவேஜுகள் கிடைப்பதில் ஏற்படும்

(4-ம் பக்கம் பார்க்க)

ரூ. 6000 கோடியில் 2-வது ஐந்தாண்டுத் திட்டம்?

வேலையற்றோர் பிரச்சினைக்கு நடுத்தர-குடிசைத் தொழில்களாம்

கிழக்கு பாகிஸ்தான் அகதிகள் வரவு அகில இந்தியப் பிரச்சினையாகிவிட்டதாம்!

உற்பத்தி மந்திரியின் அறிவிப்பு

கல்கத்தா, மார்ச் 10—

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு ஐந்து முதல் ஆறாயிரம் கோடிரூபாய்வரை மூலதனம் தேவையிருக்கும். அது, இப்போதைய முதல் ஐந்தாண்டுத் திட்டத்தினும் எல்லா வகையிலும் சிறந்த ஒன்றாக விளங்கும்.

"இந்தத் திட்டத்தைத் தயாரிப்பதில், அமெரிக்கா, ரஷ்யா உள்

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க.)

இப்படியும் செய்திகள்!

டோக்கியோ, மார்ச் 10—

"ஆசியாவில் சில வாரங்களில் பெரியதொரு யுத்தம் வரக்கூடும் என்று அமெரிக்க சர்க்காரை ஜப்பானில் உள்ள அமெரிக்க தளபதி எவரும் உஷார் செய்யவில்லை," என்று தூர கிழக்கில் அமெரிக்க சேனாதிபதியாகவுள்ள ஜெனரல் ஹல் கூறியிருக்கிறார்.

1955-ம் ஆண்டில், புதுச்சேரி மாநிலத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் பல்வேறு அபிவிருத்தி வேலைகளுக்கு மொத்தம் ரூ. 75 லட்சம் செலவாகுமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை
சென்னை 11—3—55 வெள்ளி

ஆந்திரத் தேர்தல் முடிவு

ஆந்திரத் தேர்தல் முடிவு காங்கிரசுக்கு வெற்றியையும், முக்கிய எதிர்க் கட்சியாகத் தேர்தலில் பங்கு கொண்ட கம்யூனிஸ்டு கட்சிக்கு வேதனை தரும் படுதோல்வியையும் கொடுத்து விட்டது. தமக்கு, இத்தகு பெரும் வெற்றி கிடைக்குமென காங்கிரசும் தேர்தலுக்குமுன் எதிர்பார்க்கவில்லை. அது போன்றே, இத்தகு பெரும் தோல்வி தமக்குக் காத்துக் கொண்டிருக்கிறது என்பதை, தேர்தலுக்கு முன் கம்யூனிஸ்டு கட்சி கனவுகூடக் கண்டதில்லை.

எதிர்பாராவகையில் காங்கிரஸ் கட்சிக்குக் கிடைத்த பெரும் வெற்றியும், கம்யூனிஸ்டு கட்சிக்குக் கிடைத்த பெரும் தோல்வியும் வியப்புக் குரியதேயாகும். எனவே, வாக்காளர்களின் அரசியல் மனப்போக்கை ஆராய்ந்து பார்க்க ஒவ்வொருவரும் முனைவதில் ஆச்சரியமொன்றுமில்லை.

இந்த ஆராய்ச்சிக்கு, வேறு ஒரு ஆராய்ச்சியும் முக்கியத் தேவையாகிறது. அதாவது, பொதுவாக வாக்காளர்களுக்கும், குறிப்பாக ஆந்திர வாக்காளர்களுக்கும் உள்ள ஜனநாயகப் பண்பாட்டையும், அரசியல் விழிப்புணர்வையும் கல்வி அறிவையும் முதற்கண் ஆராய்ந்து முடிவு கட்டிக் கொள்ள வேண்டியது கட்டாயமாகிறது. இரண்டொரு மாநிலத்தைத் தவிர மற்ற மாநிலங்களில் ஆந்திர மாநிலம போன்றேதான், மக்களின் கல்வி நிலையும் இருந்துவருகிறது. எனவே, தேர்தல் முடிவிற்கு, ஆந்திர மக்களின் கல்வி நிலையை ஒரு முக்கிய காரணமாகக் கொள்வதற்கில்லை.

மக்களுக்குள் அரசியல் விழிப்புணர்வை உருவாக்கி வளர்ப்பதிலும், இல்லாமல் செய்வதிலும் கல்விக்குள்ள சிறப்பை நாம் மறக்கவில்லையானாலும், அதையே முழுப் பொறுப்பாகக்கொள்ளுவது தவறுடையது என உலக வரலாறு அறிவுறுத்துகிறது. பொதுவாக ஆந்திர மக்களுக்கு ஏற்பட்ட அரசியல் விழிப்புணர்வில் பெரும் பகுதி காங்கிரஸ் கட்சியிடமிருந்து ஏற்பட்டதேயாகும்.

பொதுவாக இந்தியத் துணைக்கண்ட மக்கள் அனைவருக்கும் ஜனநாயகப் பண்பாடு மேல் நாட்டிலிருந்து இறக்குமதியானதேயாகும். அப்பண்பாடு வெறும் நடவுப் பயிராகவே இன்றும் இருந்து வருகிறது. எங்கோ ஒவ்வோர் இடத்தில் ஜனநாயக நடவுப் பயிர் சிறு வேர் விட்டு நரி பச்சைக் கட்டத் துவக்கி இருக்கிறது.

களர் நிலத்தில் நடவு பிடிக்காது. அதுபோலவே ஜாதிப் பற்று பற்றிக் கொண்டுள்ள உள்ளத்திலும் ஜனநாயகப் பயிர் கால் கொள்ளாது.

மேற்குறிப்பிட்ட கல்வி அறிவு, அரசியல் விழிப்புணர்வு, ஜனநாயகப் பண்பாடு ஆகிய மூன்று தேவைகளும் போதிய அளவு இடம் பெற்றில்லாத மக்கள் பங்கு கொண்ட ஒரு தேர்தல் முடிவை, மக்களின் கருத்தறியும் அளவுகோலாகக் கொள்ள முனைவது பொருத்தமுடையதாகாது.

அரசியல் கட்சிகளின் தராதரத்தை அறிந்து ஆதரவுகாட்டுவதற்குத் தேவைப்படும் அளவு கல்வியும், அரசியல் விழிப்புணர்வும், ஜனநாயகப் பண்பாடும் மற்றவர்களைப்போலவே பெரும்பாலான ஆந்திர வாக்காளர்களுக்கும் இல்லையென்றபோதிலும், காங்கிரசிற்கு வெற்றியையும், கம்யூனிஸ்டுக் கட்சிக்குத் தோல்வியையும் ஆந்திர வாக்காளர்கள் தேடிக் கொடுத்து இருக்கிறார்கள். எனவே, அந்த அளவில் ஆந்திர மக்களிடம் காணப் பெறும் அரசியல் போக்கிற்கான காரணம் இருக்கத்தான் இருக்கிறது.

"அறிவியல் வாதம் சராசரி அறிவு படைத்தவர்களைத் தான் தன் கருத்தை ஒப்புக் கொள்ளச் செய்யும்; ஆனல் வேஷமோ சராசரி அறிவு படைத்தில்லாத பெரும்பாலோரை தன் பக்கம் இழுத்துச்செல்ல உதவும் என்ற ஆங்கில மூதுரை ஒன்று உண்டு. அம்மூதுரைக்கொப்பத்தான் ஆந்திரத் தேர்தல் முடிவும் காங்கிரசிற்கு வெற்றியாகவும், கம்யூனிஸ்டு கட்சிக்குத் தோல்வியாகவும் முடிந்திருக்கிறது.

சென்ற தேர்தலின்போது அபேட்சகர்களாக நின்ற பெரும்பாலான கம்யூனிஸ்ட் கட்சியினர் தலைமறைவாக ஒளிந்து வாழ்ந்தனர். அவர்கள் மேற்கொண்டிருந்தகட்சி நடைமுறைதான் அத்தலைமறைவிற்கான காரணமாக இருந்த போதிலும், அதை வாக்காளர்கள் நன்கு அறிந்து கொண்டிருக்கவில்லை. கம்யூனிஸ்டு அபேட்சகர்கள் தலைமறைவாக இருப்பதற்கு காங்கிரஸ் ஆட்சியாளர்களின் அடக்குமுறைதான் பெரிதும் காரணம் என்று வாக்காளர்கள் உறுதியாக நம்பினர். அதனல் வாக்காளர்களிடை ஏற்பட்ட பரிதாப உணர்ச்சிதான், தலைமறைவாக இருந்த கம்யூனிஸ்டு அபேட்சகர்களை ஆதரித்து வெற்றி பெறச் செய்ய வாக்காளர்களுக்குத் தூண்டுதல் அளித்தது. இந்தத் தேர்தலில் அத்தகு பரிதாப உணர்ச்சி வாக்காளர்களுக்கு ஏற்பட வேண்டிய அவசியம் அறவே இல்லாமல் போய்விட்டது. காங்கிரஸ் கட்சியினர் அடக்குமுறைக்கு ஆளாகி அல்லல் பட்ட நேரத்தில், அவர்கள் பால் வாக்காளர்கள் காட்டிய ஆதரவு ஒன்றே போதும், மேற்குறிப்பிட்ட உண்மையை உறுதிப்படுத்த.

ஆந்திர மொழி மாநில ஏற்பாட்டை வேண்டுமென்றே உருவாகவிடாமல் தடுத்து வருவது காங்கிரஸ் மேலிடம்தான் என்பது, சென்ற பொதுத் தேர்தலில் ஆந்திர மக்கள் கொண்டிருந்த ஏகோபித்த முடிவாகும். அந்த வெறுப்பு, ஆந்திர மாநிலத்தை உடனடியாகப் பெறுவதை ஒருதேர்தல் கோட்பாடாகக் கொண்டிருந்த கம்யூனிஸ்டு கட்சியிடம் காதலாக மாறியது. ஆந்திர மாநிலம் கிடைத்துவிட்டதும், காங்கிரஸ் மேலிடத்தின் மீது ஆந்திர வாக்காளர்களுக்கு ஏற்பட்டிருந்த வெறுப்பும் மறைந்து விட்டது. காங்கிரஸ் மீது இருந்த வெறுப்பு மறையவே கம்யூனிஸ்டு கட்சியிடம் வாக்காளர்களுக்கு இருந்த காதலும் அத்துடன் தொலைந்து விட்டது.

இந்திய கம்யூனிஸ்டு கட்சியினல் பாராட்டப்படும் நேருவின் வெளிநாட்டுக் கொள்கை உள்நாட்டில் எத்தகைய விளைவை உண்டாக்குமோ, அத்தகைய விளைவை உண்டாக்குமோ அத்தகைய விளைவை ஆந்திரத் தேர்தலில் உண்டாக்கிவிட்டது. அறிந்தோ, அறியாமலோ தாங்கள் பாராட்டினதற்குக் கொடுத்துத்தீர வேண்டிய விலையை கம்யூனிஸ்டு கட்சியினர் ஆந்திரத் தேர்தலில் கொடுத்துவிட்டார்கள்.

புதுசீனவுடன் நேரு செய்து கொண்ட 'பஞ்சசீல' உடன்பாடும், நேருவுக்குக் கிடைத்த சோவியத் பத்திரிகையான 'பிராவ்டா' வீண் புகழுரையும், ஆந்திரத் தேர்தலில் கலந்து கொண்ட கம்யூனிஸ்ட் கட்சியினரின் கழுத்தை அறுக்கும் மிகக் கூர்மையான அரிவாளாக முடிந்தது.

பண்டிதரின் வெளிநாட்டுக் கொள்கையைப் பாராட்டும் அதே மூச்சில், உள்நாட்டு நடைமுறைகளைக் கர்ண கடூரமாகக் கண்டித்துவரும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் போக்கில் உள்ள 'மகத்தான தத்துவ'த்தை ஆந்திர வாக்காளர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. அந்தக் குழப்பமும் கம்யூனிஸ்ட் தோல்வியாகவும், காங்கிரஸ் வெற்றியாகவும் முடிந்துவிட்டது.

மேலும் ஆவடி காங்கிரஸ் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட போலி 'சோஷலிச'த் தீர்மானமும், ஆந்திர தேர்தலில் எந்த அளவு செல்வாக்கைப் பெறவேண்டுமோ, அந்த அளவு செல்வாக்கைப் பெற்றுத்தான் உள்ளது.

தன் பலத்தையும் மாற்றான் பலத்தையும் மதிப்பிட்டுப்பாராமலே குறிப்பிட்ட சில தொகுதிகளில் மட்டுமே போட்டியிட வேண்டிய கம்யூனிஸ்டு கட்சியினர், தங்கள் ஆற்றலுக்கு மீறி பல தொகுதிகளில் போட்டி இட்டனர். எனவே, தோல்வியும் முழு அளவில் கிடைத்துவிட்டது.

வாய் தவிடும் போய் அடுப்பும் அணைந்தது என்ற கதிக்கு ஆந்திர கம்யூஸ்டு கட்சி வந்திருக்கிறது. தோர்தலில் தோற்றுப் போன கட்சியில் கலகலப்பு ஏற்படுவதுபோலவே, கம்யூனிஸ்டு கட்சியிலும் கலகலப்பு ஏற்பட்டு இருக்கிறது. 'தோல்விக்கு நீதான் காரணம்! தோற்றதற்கு உன் திட்டம்தான் காரணம்!' என உயர்தரக் கம்யூனிஸ்டுத் தலைவர்கள் அனைவரும், இனி ஒருவரை ஒருவர் பார்த்து குற்றப்பத்திரிகை வாசிப்பர் என்பதில் ஆட்சேபணை இல்லை. கட்சியைவிட்டு யார் யார் விலகுகிறார்களோ—விலக்கப்படுகிறார்களோ யார் கண்டார்கள்?

அமெரிக்காவைப்போல இந்தியாவிலும் நிறவேற்றுமை

ஆரியர் வருகைக்குப்பின் வருணச்சிரம அடிப்படையில் நிலவுகிறது!

"இந்த நாட்டிற்கு ஆரியர்கள் வந்தது முதல், இந்தியாவிலுள்ள வகுப்புகள், வருணச்சிரமத்தை அடிப்படையாகக் கொண்டு இருந்துவந்திருக்கின்றன.

சாதி முறையை நன்கறிந்தவர்கள், அது, 'வர்ண' முறையில் பிரிவுகளை உண்டாக்குவதின் அழிந்துபோன உருவம்தான் என்பதை உணரமுடியும்.

இந்தியாவில் ஆப்பிரிக்கர்கள் வந்த பிறகுதான் நிற வெறுப்பு துவங்கியது எனக் கொள்ள முடியாது; ஆனல், அது, இந்த நாட்டில் பன்னெடுங்காலமாய் இருந்து வரும் ஒன்ருகும்.

ஆப்பிரிக்க மாணவரை அவரது தோற்றத்திற்காக மனம் புண்படும்படி பேசிய இந்திய மாணவர், தன்னையும் அவர்களுள் ஒருவராக ஆக்கிக்கொண்டார் என்று கூறுகிறர்.

இந்திய மாணவர்களுடன் ஒப்பிடும்போது இங்கு வந்த ஆப்பிரிக்க மாணவர்கள், இந்திய மாணவர்களைக் காட்டிலும் பரந்த மனம் படைத்தவர்களாக இருக்கக் காணப்பட்டனர்; அவர்களுக்கு, 'துன்புறுத்தக் கூடியது எது? விளையாட்டு எது?' என்பது தெரியும்.

அமெரிக்காவிலோ அல்லது இங்கிலாந்திலோ நிலவுகிறது என்று நான் படித்தறிந்திருக்கிற நிற வேற்றுமை, இந்தியாவிலும் நிலவத்தான் செய்கிறது.

'வெள்ளை' இந்தியர்களுடன் ஒரு 'கறுப்பு' மனிதன் எந்த வித சமூகத் தொடர்புமே கொள்ள முடியாத அளவு, அந்த 'நிற மாச்சரியம்' நிலவுகிறது.

ஐரோப்பியர்கள், நிறத்திற்கென்று அவ்வளவு அதிக முக்கியத்துவம் தருவதில்லை; ஆனல், அவர்கள், தங்களது சொந்த இனப் பெருமை கருதி, மற்றவர்களை விடுத்து தனித்துப் பிரிந்து வாழ விரும்புகின்றனர்; ஆனல் வெள்ளையருக்கும் கறுப்பருக்கும், அங்கு ஒரு சமூக ஒப்பந்தம் ஏற்பட்டால், அதில் நயவஞ்சகமிருக்காது.

ஒரு ஆப்பிரிக்க ஆண்மகனுடன், ஒரு இந்தியப்பெண்மணி காணப்பட்டால், அதுவே நகர முழுவதும் பேசப்படும் ஒன்ருகி விடுகிறது. ஆனல், ஒரு இந்திய ஆண்மகன் ஆப்பிரிக்கப் பெண்மணி ஒருவருடன் காணப்பட்டால், 'உனக்கு வேறு நல்ல துணை கிடைக்கவில்லையா?' என்று கேட்கிறர்கள்."

என்று சி. என். ஓமான்டி என்பவர், பம்பாயிலிருந்து வெளிவரும் 'டைம்ஸ் ஆப் இந்தியா' இதழின் ஆசிரியருக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறர்.

ரூ. 102 கோடி செலவில் நீர்ப் பாசனத் திட்டங்கள்

மேற்கு வங்க அரசாங்கம் முடிவு

சுமார் 102 கோடி ரூபாய் செலவில், 131 நீர்ப்பாசனத் திட்டங்களை மேற்கு வங்க அரசாங்கம், இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் கிழ் மேற்கொள்ளப் போவதாக அஜாய் முகர்ஜி என்ற மேற்கு வங்க மாநில நீர்ப்பாசன இலாகா மந்திரி சட்ட சபையில் அறிவித்துள்ளனர்.

"சுதந்திரத்திற்குப் பிறகு சுமார் 19 கோடி ரூபாய் நீர்ப்பாசனத்திற்காகச் செலவிடப்பட்டுள்ளது: 177 திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன; இதனல் 12 லட்சம் ஏகர் நிலம் பலனடைந்தது; இதன் விளைவாக 1,54,00,000 மணங்கு அதிகமான உணவுப் பொருள் உற்பத்தியாயிற்று," என்றும் மந்திரி சட்ட சபையில் விபரம் கூறியுள்ளார்.

இத்தனை நாள் யாருடன் தொடர்போ?

மக்களுடன் தொடர்பு கொள்ள ம. பி. மந்திரிகள் சுற்றுப் பயணமாம்!

மத்திய பிரதேச மாநிலத்தில் உள்ள 19 மந்திரிகள், துணை மந்திரிகள் ஆகியோர், கிராமாந்திர நிர்வாகப் பிரச்சினைகளைப் புரிந்து கொள்வதற்காக 'மக்களுடன் தொடர்பு கொள்ளும்' சுற்றுப் பிரயாணங்களை மேற்கொள்ளுவார்கள் என்று கூறப்படுகிறது.

இந்தச் சுற்றுப்பயணத்தின் போது, ஆங்காங்குள்ள மக்களின் குறைகளைக் களைவதற்காக ரூ. 11 லட்சம் செலவிடப்படுமாம்

22 மாவட்டங்களுக்கும் தலா ரூ. 50 ஆயிரம் ரூபாய் தரப்படுமாம்.

கிராம மக்களிடையே, கூட்டுறவு உணர்வு, தனக்குத்தானே உதவிக்கொள்ளும் உணர்வு இவற்றை வளர்ப்பதற்காகவும் சுற்றுப் பயணம் பயன்படுமாம்.

புதுக்கிணறு தோண்டுதல், பழங்கிணறுகளைப் பழுதுபார்த்தல், சிறு நீர்ப்பாசன வசதிகளை அமைத்தல், மருத்துவ வசதி, சுகாதாரம் இவற்றிற்காகவே இந்த ரூபாய் செலவிடப்படுமாம்.

இணங்கிவிட்டனர்!

சிறிது நாட்களாக, சென்னை சட்ட சபையில் கேட்கப்படும் கேள்விகளுக்கும், உறுப்பினர்களால் எழுப்பப்படும் பிரச்சினைகளுக்கும் அமைச்சர்கள் தமிழிலேயே பதிலளித்து வந்தனர். அதனல், தமிழ் தெரியாத மலையாள, கன்னட உறுப்பினர்கள், தங்களுக்குத் தமிழ் புரியவில்லையென்றும், சபையில் என்ன நடக்கிறதென்பதை அறிவதற்குச் சிரமமாக இருக்கிறதென்றும் சபாநாயகரிடம் புகார் கூறினர்.

சபாநாயகர், இக்குறைபாட்டை அமைச்சர்களுக்கு அறிவித்ததின் மீது, அமைச்சர்கள், அவசியமான போது தவிர, இனி பொதுவாக ஆங்கிலத்திலேயே பதிலளிப்பதென முடிவு செய்துள்ளனராம்.

மத்திய சர்க்காருக்கு சென்னையின் யோசனை!

குரோம்பேட்டையிலுள்ள சென்னை தொழில் நுட்பக் கழகத்தை மத்திய உயர்தர தொழில் நுட்பக் கழகத்திற்கு மாற்றி, அதை மத்திய சர்க்காரே நடத்தலாமென அக்கழக அதிகாரிகள் தெரிவித்த விருப்பத்தை ஏற்குமாறு சென்னை மாநில அரசாங்கம் மத்திய சர்க்காருக்கு யோசனை கூறியுள்ளதாம்!

இந்தியாவில் 1954-ம் ஆண்டில் உற்பத்தியானஇந்துப்பின் மொத்த அளவு 1 லட்சம் மணங்காகும்.

பின்தள்ளப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு இலவசக் கல்வி

மத்திய பிரதேச அரசாங்கத்தின் முடிவு

பின்தள்ளப்பட்ட வகுப்பு குழந்தைகளுக்கு எல்லா தரக் கல்வியும் இலவசமாகத் தருவது என்று மத்திய பிரதேச அரசாங்கம் முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது.

மத்திய அரசாங்கம் செய்த சிபாரிசின் பேரில் இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டதாக அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த முடிவினால் மாநில அரசாங்கத்திற்கு ஆண்டுதோறும் ரூ. 5 லட்சம் செலவாகும் என்று கூறப்படுகிறது.

சர்க்கார் பள்ளிகளுக்கு, இப்போது அந்த பின்தள்ளப்பட்ட வகுப்பு மாணவர்கள் தரும் சம்பளத் தொகை கிடைக்காமற் போவதுடன் ஏற்படும் நஷ்டத்துடன், தனிப்பட்ட பள்ளிகளுக்கு அம்மாதிரி ஏற்படும் நஷ்டத்தையும் சர்க்கார் ஈடுசெய்ய வேண்டியிருக்குமென்று கூறப்படுகிறது.

மாநிலத்தில் உள்ள எல்லா பள்ளிகளிலும், ஷெட்யூல்டு வகுப்பு மாணவர்களுக்கு இலவசக் கல்வி கிடைக்கும்.

செகண்டரி படிப்பு வரையில், அங்கீகாரம் பெற்ற அனாதை விடுதிகளில் தங்கியிருந்து படிக்கும் ஆதரவற்ற அனாதைக் குழந்தைகளுக்கும் இந்த இலவசக் கல்விச் சலுகை கிடைக்கும் என்று தெரிகிறது.

இப்போது பின்தள்ளப்பட்ட வகுப்பு மாணவர்களில் ஒரு சிலருககே கல்விச் சலுகை கிடைக்கிறது; இனி பின்தள்ளப்பட்ட வகுப்பைச் சேர்ந்த எல்லா மாணவர்களுக்கும் கிடைக்கும்.

குறைந்த அளவு சம்பளம் வாங்கும் சர்க்கார் ஊழியர், நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள் ஆகியோரின் குழந்தைகளுக்கு இலவசக் கல்வி தருவது என்று ஏற்கனவே மத்தியப் பிரதேச அரசாங்கம் முடிவு செய்துள்ளதாம்.

இந்தியாவில் மின்சார மோட்டார் உற்பத்தி

ஐந்து மடங்கு பெருகியுள்ளது!

மின்சார மோட்டார் உற்பத்தி, சுதந்திரத்திற்குப் பிறகு இந்தியாவில் ஐந்து மடங்கு பெருகியிருக்கிறது. 1947-ல் மின்சார மோட்டார்களின் உற்பத்தி 37,000 கு. வே. (குதிரை வேகம்) ஆக இருந்தது—1954-ல் 1,87,000 கு. வே. ஆகப் பெருகிவிட்டது.

ஆண்டிற்கு மொத்தம் சுமார் 3,40,000 கு. வே. அளவுக்கு மின்சார மோட்டார்களைத் தயாரிப்பதில் 12 தொழில் நிறுவனங்கள் முனைந்துள்ளன. இதுகாறும் உற்பத்தி செய்யப்பட்ட மோட்டார்களின் உயர்ந்தபட்ச குதிரை வேக அளவு 225 ஆகும். ஆனபோதிலும், மேலும் அதிக குதிரை வேகமுள்ள மோட்டார்களையும் நம் நாட்டில் உற்பத்தி செய்யமுடியும். நம் நாட்டிலுள்ள 12 தொழில் நிறுவனங்களில் சுமார் 6 நிறுவனங்கள், 50 குதிரை வேகத்துக்கு மேற்பட்ட சக்தியுடைய மின்சார மோட்டார்களை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ளன.

இப்போது இயங்கிவரும் நிறுவனங்களில் சிலவற்றை விரிவாக்குவதன் மூலமாகவும், தொழில் (அபிவிருத்தி, ஒழுங்குமுறை) சட்டத்தின் கீழ் புதுத் தொழில்களுக்கு லைசென்சுகள் வழங்கி, அத்தொழில்களை ஆரம்பிப்பதின் மூலமாகவும் ஓராண்டிற்குக் கூடுதலாக 1,05,000 குதிரை வேக அளவுக்கு மின்சார மோட்டார்களை உற்பத்தி செய்ய முடியும்.

மின்சார மாற்றிகளின் உற்பத்தி

மின்சார மாற்றிகளின் (டிரான்ஸ்பாமர்) உற்பத்தியிலும் கணிசமான முன்னேற்றம் காணப்படுகிறது. 1949-ல், 1,09,000 கிலோவாட் ஆம்பியர் அளவுக்கு மின்சார மாற்றிகள் உற்பத்தியாயின; 1954-ல் அவைகளின் உற்பத்தி 4,00,000 கிலோவோட் ஆம்பியர் அளவுக்கு பெருகியது.

மின்சார மாற்றிகளை உற்பத்தி செய்யக்கூடிய 9 தொழில் நிறுவனங்கள் இந்நாட்டில் உள்ளன; இவற்றில் சில விரிவாக்கப்படும்; சில புது நிறுவனங்களும் ஆரம்பிக்கப்படும். இவற்றால் ஆண்டிற்கு மொத்தம் 2,21,000 கிலோவாட் ஆம்பியர் அளவுள்ள மின்சார மாற்றிகள் உற்பத்தி செய்ய முடியும்.

காகிதத் தொழிலில் முன்னேற்றம்

தென்பகுதியில் 7 காகிதத் தொழில் நிறுவனங்கள்

இந்தியாவில் கடந்த நான்கு ஆண்டுகளாகக் காகித உற்பத்தி சுமார் 50,000 டன் கூடுதலாகப் பெருகியிருக்கிறது. 1950-ம் ஆண்டில் காகித உற்பத்தி 1,03,907 டன்னாக இருந்தது — 1954-ல் 1,55,328 டன்னாக உயர்ந்திருக்கிறது. 1956-ம் ஆண்டு இறுதியில், காகித உற்பத்தி 2,37,110 டன்னுக்கு உயர்ந்துவிடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

ஆண்டொன்றுக்கு 2,00,000 டன் காகிதம் இந்தியா முழுமைக்கும் தேவைப்படுகிறது. கூடுதலாகும் காகித உற்பத்தி மூலம் தேவைகளைச் சமாளித்துவிடலாம் என்றாலும், காகித ரகங்களில் சிலவற்றை, சில குறிப்பிட்ட தொழில்களுக்காகவும், குறிப்பிட்ட வகையான உபயோகம் செய்பவர்களுக்காகவும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யவேண்டியிருக்கிறது.

காகித உற்பத்தித் தொழில்களில் 26,000 பேர் ஈடுபட்டுள்ளனர்; அவர்களில் 2,100 பேர் தொழில் நுட்பம் தெரிந்தவர்கள்; இத்தொழில் விரிவாக்கப்படும்போது, 1960–61-ம் ஆண்டில், சுமார் 54,000 பேர் இத்தொழிலில் ஈடுபட்டிருப்பார்கள்; அவர்களில் தொழில் நுட்பம் தெரிந்தவர்களின் எண்ணிக்கை 4,000 ஆக இருக்கும்.

இத்தொழிலுக்காகப் போடப்பட்டுள்ள மூலதனம் ரூ. 21·72 கோடியாகும். புதுத் திட்டங்கள் நிறைவேறும்போதும், இப்போது இயங்கிவரும் தொழில் நிறுவனங்கள் மேலும் விரிவாக்கப்படும்போதும் மேற்கொண்டு ரூ 314 3 கோடி முதலீடு செய்யவும் உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

தற்போது, 21 தொழில் நிறுவனங்கள் காகித உற்பத்தியில் ஈடுபட்டுள்ளன. அவற்றில் 7 நிறுவனங்கள் தெற்குப் பகுதியிலும், 5 பம்பாய் — மத்தியப் பிரதேசத்திலும், 3 பஞ்சாப்—உத்திரப் பிரதேசம் ஆகிய பகுதிகளிலும், 6 மேற்கு வங்காளம், பீகார், ஒரிசா ஆகிய மாநிலங்களிலும் உள்ளன.

தூற்றியதால் ஏற்பட்ட விளைவு!

இத்தாலிய செனட் சபையில், உறுப்பினர்களிடையே கைகலப்பு ஏற்பட்டதின் விளைவாக பல உறுப்பினர்களுக்குக் காயம் ஏற்பட்டது.

சண்டையை விலக்கிவிட, சபைத் தலைவர், காவலாளிகளைக் கூப்பிட வேண்டியதாயிற்றும்.

இதன் விளைவாக சபை ஒருமணி நேரம் வேலையற்று நிலைநின்றதாம்.

பாசிஸ்டு இராணுவத் தளபதிகளை ஒரு கம்யூனிஸ்டு உறுப்பினர், சபையில் தூற்றியதின் விளைவாகவே சண்டை மூண்டது என்று கூறப்படுகிறது.

ஆந்திரத் தேர்தல் முடிவுகள்

மக்களின் எண்ணத்தைப் பிரதிபலிப்பன அல்லவாம்!

"ஆந்திரத் தேர்தல் முடிவுகள் மக்களின் விருப்பத்தைப் பிரதிபலிக்கவில்லை,"

என்று, கம்யூனிஸ்டு தலைவர் ஏ. கே. கோபாலன், திருவனந்தபுரத்திலுள்ள பத்திரிகை ஒன்றில் எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

"1952-ல் நடைபெற்ற பொதுத் தேர்தலின்போது கம்யூனிஸ்டுகள் தலைமறைவாயிருந்த போதிலும், ஆந்திராவில் 42 இடங்களைப் பெற முடிந்திருக்கிறது; அதனால், இப்போதைய ஆந்திரத் தேர்தல் முடிவுகள் மக்களின் எண்ணத்தைப் பிரதிபலிக்கிறதா அல்லது முடிவுகள் மந்திரமா என்பதை மக்கள்தான் முடிவுகூற வேண்டும்," என்றும்அவர்குறிப்பிட்டிருக்கிறார்.

பம்பாயில் விற்பனை வரி வருமானம்

பம்பாய் நிதி மந்திரி ஜீவராஜ் மேத்தா—1954 ஏப்ரல் முதல் அமுலில் இருக்கும் இருமுனை விற்பனை வரி மூலம் கடந்த 6-மாத காலத்தில் ரூ 10·23 கோடி இருந்தது— முதல் மூன்று மாதத்தில் ரூ. 5·25 கோடியாகவும், இரண்டாம் மூன்று மாதத்தில் 4·98 கோடியாகவும் இருந்தது—என்று குறிப்பிட்டிருக்கிறார்.

"1952 நவம்பர் முதல் 1954 மார்ச்சு முடிய இருந்த பலமுனை விற்பனை வரி சராசரியாகக் கால் ஆண்டிற்கு ரூ. 4-கோடியாக இருந்தது" என்றும் அவர் கூறினார்

இந்தியரல்லாத அதிகாரிகள்

மத்திய, மாநில அரசாங்கங்களில் பணிபுரியும் இந்தியரல்லாத அதிகாரிகள், உத்தியோகஸ்தர்கள் பற்றி மத்திய அரசாங்கம் விசாரணை நடத்திவருகிறதாம்.

எல்லா மாநில அரசாங்கங்களும், தங்களின் கீழ் பணியாற்றும் அத்தகைய இந்தியரல்லாதஅதிகாரிகள் குறித்த விவரம் தருமாறு கோரப்பட்டிருக்கிறார்களாம்.

பொதுவாகவே, 'உத்தியோகங்கள் இந்தியக் குடிமக்களுக்கே தரப்படவேண்டும்,' என்ற சம்பிரதாயம், இந்தியாவில் உள்ள வேலை நிலைகளைப் பொறுத்து பின்பற்றப்பட்டு வருவதாகவும், 1947 ஆகஸ்டு 15-ந் தேதிக்கு முன்பிருந்த அதிகாரிகளில் சிலர் இன்னும் தொடர்ந்து பணிபுரிந்து வருவதாகவும் கூறப்படுகிறது.

மத்திய சர்க்கார் இந்தியரல்லாத அதிகாரிகள் குறித்த விவரங்களைச் சேகரித்து வருகிறார்களாம்.

வைத்திய படிப்புத் திட்டம்

"நோய்களின் சிகிச்சையைவிட தடுப்புக்கு முக்கியத்துவமளிப்பதே நாட்டின் சுகாதார நலனுக்கு, தேவை; இதற்கான மனப்பான்மை ஏற்பட வைத்தியக் கல்லூரிப் படிப்பையும் மாற்றி அமைக்க உத்தேசிக்கப்படுகிறது; இதை ஆராய்ந்து முடிவுகாண டில்லியில் மத்தியசர்க்கார் சுகாதார மந்திரி ஒருமாநாட்டைக் கூட்டுகிறார்," என்று, சட்டசபையில், சுகாதார மானியத்தின்மீது நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலளிக்கையில் சுகாதார மந்திரி ஷெட்டி கூறியிருக்கிறார்.

சென்னை சட்டசபையில்....

அதிகாரமில்லையாம்!

"இப்போதுள்ள சட்டத்தின் கீழ்; துணி ஆலை முக்கூட்டு விசாரணைக் குழுவின் சிபாரிசுகளை அமுலாக்க முடியாமலிருப்பதால், பிரச்சினைகளைத் தனிப்பட்ட தொழில் தகராறுகளாகக் கொண்டுவந்தால், அவற்றை, முதலில் சமரசத்திற்குப் பின் இறுதி முடிவு செய்யலாம் என்று தொழிலாளர்களுக்கு அரசாங்கம் ஆலோசனை கூறுகிறது," என்று கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் மந்திரி பக்தவத்சலம் குறிப்பிட்டிருக்கிறார்.

சிபாரிசைக் கவனித்தே!

"அரிசி 'மில்' விசாரணைக் குழு இவ்வாரம் சென்னைக்கு வருகிறது; அதன் அறிக்கை இன்னும் ஓரிரு மாதங்களில் தாக்கலாகிவிடும்; அதன் பிறகு புதிய அரிசி மில்களுக்கு அனுமதி வழங்குவதையோ, வழங்காமல் தடுப்பதையோ பற்றி அரசாங்கம் கவனிக்கும்," என்று மந்திரி பக்தவத்சலம் குறிப்பிட்டிருக்கிறார்.

பரவலாக்க!

"சில கைத்தொழில்களை, குறிப்பிட்ட ஒரு இடத்திலேயே நடத்த விரும்பும் மனப் போக்கு இருப்பது சர்க்காருக்குத் தெரியும்; குறிப்பாக ஜவுளி ஆலைகள், கோவைப் பகுதிகளில் தான் நிறுவப்படுகின்றன; சீதோஷ்ண சூழ்நிலை, மூலதனம், கச்சாப் பொருள் பயிற்சியுள்ள தொழிலாளர்கள், இதர வசதிகள் கிடைப்பதைப் பொறுத்தே தொழில்கள் நிறுவப்படுகின்றன; இவ்வசதிகள் இல்லாத இடங்களில் கைத்தொழில்களை நிறுவ வற்புறுத்துவது உசிதமானதல்ல; என்றாலும், கைத்தொழில்களைப் பரவலாக ஏற்படுத்துவது நன்மை பயக்கும் என்பதை சர்க்கார் உணர்ந்தே இருக்கின்றனர்; வசதிகள் இருப்பின் ஜவுளி ஆலைகளை இதர இடங்களில் துவக்க அரசாங்கம் தூண்டுகிறது," என்று மந்திரி பக்தவத்சலம் குறிப்பிட்டிருக்கிறார்.

மறையும் மாயம் ஏதோ?

"அனுப்பப்பட்ட மனுக்கள் வரவில்லை என்று மந்திரி கூறுகிறாரே; சர்க்கார் இலாகாவில் அவை சாப்பிடப்பட்டுவிடுகின்றனவா?" என்று ஒரு கம்யூனிஸ்டு உறுப்பினர் கேள்வி கேட்டு, சபையில் சிரிப்பை மூட்டியிருக்கிறார்

வெடி விபத்து வழக்குகள்

"சென்ற ஆண்டு வெடி விபத்தினால் ஏற்பட்ட வழக்குகள் இருந்தன; அவை குடும்பச் சச்சரவு, அரசியல் சச்சரவு, கிரிமினல் குற்றங்கள் ஆகிய மூன்றில் எதனால் ஏற்பட்டன?" என்ற கேள்விக்கு, "அனேகமாக கிரிமினல் குற்றங்களாலேயே," என்று நிதி மந்திரி குறிப்பிட்டிருக்கிறார்.

உண்மைதானும்!

வகுப்பு, மதப் பெயர்களைக் கொண்ட மாணவர் விடுதிகளுக்கு சர்க்கார் மானிய உதவி அளித்து வருவது உண்மைதான் என்றும், இவற்றின் பெயர்களை மாற்றுவது குறித்து சர்க்கார் கவனித்து வருவதாகவும் மந்திரி பரமேசுவரன் குறிப்பிட்டிருக்கிறா.

குழாய்க் கிணறுகள்

அமெரிக்க தொழில் நுணுக்கக் கூட்டுறவுத் திட்ட உதவியின் கீழ், சென்னை மாநிலத்தில் குழாய்க் கிணறுகளை நிறுவ, மத்திய அரசாங்க அதிகாரிகள் மாநிலத்தின் பல பகுதிகளில் அண்மையில் சுற்றுப் பயணம் செய்தனர் என்றும், சென்னை மாநிலத்தில் அந்தக் குழாய்க் கிணறுகளை நிறுவ ரூ. 1 கோடி கடன் தருவதற்கு மத்திய அரசாங்கம் ஒப்புக்கொண்டுள்ளது என்றும் மந்திரி பக்தவத்சலம் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

சிமெண்ட் தொழில்

சிமெண்ட் தொழில் பற்றி நிறுவப்பட்ட முக்கூட்டு விசாரணைக் குழு தன் அலுவல்களை இவ்வாண்டு பிப்ரவரி மாதமே முடித்துவிட்டது என்றும், மத்திய ஊதிய நிர்ணயக் குழு, முக்கூட்டுக் குழு ஆகியவற்றின் சிபாரிசுகள் அனுப்பப்பட்ட பின்னரே நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தொழில் மந்திரி கூறியிருக்கிறார்.

செய்திச் சுருள்

மருத்துவமனை திறப்புவிழா

கிராம நல இலாகாவின் ஆதரவுடன் சின்னதாராபுரத்தில் புதிய மருத்துவமனை ஒன்றை திரு. மணி தலைமையில் கரூர் டெபுடி கலெக்டர் மருதப்பா அவர்கள் திறந்து வைத்தார்.

பொன்மலை திராவிட வாலிபர் கழகம்

4—3—55 மாலை 7 மணிக்கு பொன்மலைப்பட்டி தி. மு. கழகக் காரியாலயத்தில், தோழர் ஜி. பராங்குசம் தலைமையில் நடைபெற்ற கழக உறுப்பினர்கள் கூட்டத்தில், தோழர்கள் கோவிந்தசாமி, சி. ராமையன், எம். ஒர்த்தசாமி, ஆர். கைலாசம், சி. காசிமுத்து ஆகியோர், கழக தோட்ட மானேஜிங் கமிட்டியினர் முறையான நடவடிக்கை எடுக்கத் தவறி இருப்பதையும், கழகம் இனி எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்பதைப் பற்றியும் விரிவாகப் பேசியபின், மீண்டும் 13–3–55ல் உறுப்பினர் கூட்டம் கூட்டுவதென்ற முடிவுக்குப் பிறகு, நடவடிக்கை எடுக்கத் தவறிய மானேஜிங் கமிட்டியாரின் செய்கைக்கு வருந்தியும், உடனடியாக தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரும் தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டது.

கழகத் தோழரின் வெற்றி

மதுரை மாவட்டம் உசிலம்பட்டி ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் தேர்தல் 28—2—55-ல் நகர் மன்றத் தலைவர் வி. வீரணன் தலைமையில் நடைபெற்றது. துணைத் தலைவர் ராஜினாமாச் செய்த அந்த இடத்திற்கு உசிலம்பட்டி தி. மு. கழகத் தோழர் ல. சவுந்திரபாண்டியன் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பன்னீர் செல்வம் நினைவுக் கூட்டம்

8—3—55 இரவு 7 மணிக்கு, சென்னை பெத்துநாய்க்கன் பேட்டை திருவள்ளுவர் முத்தமிழ் கழகத்தில் தோழர் மு. ப. புட்பரத்தினம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர்கள் ஏ. வி. ஆசைத்தம்பி, ம. ரா. ரத்தினம், த. து. பத்மனுபன் ஆகியோர் பன்னீர்செல்வம் அவர்களின் சேவையைப் பற்றியும், அவரின் வாழ்க்கையைப் பற்றியும் சொற்பொழிவாற்றினர்.

ஆரம்பக் கல்வி கண்காட்சி

அரக்கோணம் ஆசிரியர் சங்கச் சார்பில் 5—3—55-ல், சி. எஸ். ஐ. சென்ட்ரல் பள்ளியில் நடைபெற்ற ஆரம்பக் கல்விக் கண்காட்சியை திரு. பி. பக்தவச்சலு, எம்.எல்.ஏ., திறந்து வைத்தார். கண்காட்சியில் பல பள்ளிகள் பங்கேற்றன; ஏராளமான பொதுமக்கள் காட்சியைக் கண்டு களிப்புற்றனர்.

பிறப்பு

கணியூர் தி. மு. கழகத் தோழர் எம். சுப்பையன் அவர்களது துணைவியார் 21—2—55ல் ஒரு ஆண் மகவுக்குத் தாயானார்.

* * *

சந்திரப்பட்டி கழகத் தோழர் சி. பி. அண்ணாமலை அவர்களின் துணைவியார் பழனியம்மாள் 3—3—55ல் ஒரு ஆண் மகவுக்குத் தாயானார்.

வெல்லம், புளி, அரிசி ஆகியவற்றின் விலை குறைந்ததின் காரணமாக, 1955 பிப். 25ந்-தேதியுடன் முடிவான வாரத்தில் சென்னை நகரத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரப் புள்ளி 324 ஆக இருந்தது.

இந்தியாவிலுள்ள சோவியத் தூதவர் ஆலோசனையின் பொருட்டு திடீரென மாஸ்கோவுக்கு அழைக்கப்பட்டதின் காரணமாக, அவர் ரஷ்யாவுக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளார்.

ஆச்சாரியார் காலத்தில் டாக்டர் வரதராசுலு மீது ஜோடிக்கப்பட்ட வழக்கு தள்ளுபடி

சென்னை உயர் நீதிமன்ற முடிவு

சென்னை, மார்ச் 10— கட்டுப்பாடு விதிகளை மீறி 200 டன் துத்தநாகத் தகடுகளை திரு அடைக்கலம் என்பவருக்கு விற்றதாக டாக்டர் பி. வரதராசுலு மீதும், அதற்கு உடந்தையாக இருந்ததாக திரு. அடைக்கலம் மீதும் சென்னை பிரதம மாகாண நீதிபதி தயாரித்து அனுப்பிய குற்றச்சாட்டு அறிக்கையை இன்று சென்னை உயர்நீதி மன்றத்தில் நீதிபதி திரு. பி. வி. பாலகிருஷ்ணய்யர் ரத்து செய்தார்.

ஒப்பந்தம் செய்துகொள்ளும் காலத்தில் தெரிவிக்கப்படாத ஒரு நிபந்தனையை மீறியதாக யாரையும் தண்டிக்க முடியாதென்று நீதிபதி கூறினார்.

மேலும் நீதிபதி குறிப்பிடுகையில், "நீதி உபகுழுவில் டாக்டர் பி. வரதராசுலுவுடன் மேலும் இரு உறுப்பினர்கள் (திரு. சி. பெருமாள்சாமி ரெட்டியாரும், திரு.ஆர். கணேசனும்) இருந்திருக்கிறார்கள். இவர் ஒப்பந்த விதியை மீறியிருந்தால், ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருந்த மற்ற இருவரும் அதே குற்றத்தைச் செய்தவர்களாவார்கள். இதில் ஒருவரை மட்டும் குற்றத்திற்குள்ளாக்குவதின் நியாயம் தனக்கு விளங்கவில்லை என்றும், இத்தகைய பாரபட்சம் காட்டும் செய்கையை நீதிமன்றம் கண்டிக்கத்தான் வேண்டும்" என்றும் கூறினார்.

அன்றியும் இது சம்பந்தமாக கீழ் நீதிமன்றத்தில் போலீஸ் அதிகாரி கொடுத்த சாட்சியம் திருப்திகரமாயில்லை என்பதையும் நீதிபதி எடுத்துக்காட்டினார்.

ஒப்பந்தநிபந்தனைகள் கைத்தறிக் கண்காட்சிசெயலாளருக்குஅறிவிக்கப்படவில்லை என்பதை இரும்புக் கட்டுப்பாடு அதிகாரியே தன் சாட்சியத்தில் ஒப்புக்கொண்டிருப்பதையும் நீதிபதி தெரிவித்தார்.

குடிசைத் தொழில்களாம்...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ளிட்ட வெளிநாட்டு புள்ளிவிவர நிபுணர்களின் உதவியும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

"நாட்டில் உள்ள வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்சினையை இந்திய அரசாங்கம் நன்கு உணர்ந்தே இருக்கிறது.

"மூலாதாரத் தொழில்களை மட்டுமின்றி குடிசை, மற்றும் நடுத்தரத் தொழில்களையும் ஏராளமாகத் துவக்குவதைப் பொறுத்துத்தான் அந்தப் பிரச்சினைக்குரிய பரிகாரம் இருக்கிறது."

—இவ்வாறு, மத்திய அரசாங்க உற்பத்தி இலாகா மந்திரி கே. சி ரெட்டி, இங்கு நடைபெற்ற காங்கிரஸ் ஊழியர் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

"கிழக்கு பாகிஸ்தானிலிருந்து மேற்கு வங்கத்திற்குள் ஏராளமாக வந்துகொண்டிருக்கும் அகதிகளின் பிரச்சினை ஒரு அகில இந்தியப் பிரச்சினையாகிவிட்டது,"

என்றும் அவர் வர்ணித்திருக்கிறார்.

விலைச் சரிவு!

பம்பாய் நடவடிக்கை

குறிப்பிட்ட ஒரு அளவுக்கும் மேலாக விலைகள் சரிந்தால், சோளம், கம்பு ஆகிய தானியங்களை சர்க்கார் சார்பில் விலைக்கு வாங்குமாறு சில மாவட்ட அதிகாரிகளுக்குபம்பாய் அரசாங்கம் உத்திரவு அனுப்பியிருக்கிறதாம்.

பிரிட்டிஷாருக்கு பென்ஷன்!

இந்தியாவில் முன்பு பிரிட்டிஷ் அரசாங்க சிப்பந்திகளாக வேலை பார்த்தவர்களுக்குப் பென்ஷன்கள் முதலியவை வழங்கும் பொறுப்பை 1955 ஏப்ரல் 1-ந் தேதி முதல் பிரிட்டிஷ் சர்க்காரிடம் ஒப்படைக்க இந்திய அரசாங்கம் சம்மதித்திருக்கிறது. இதுவரை இந்தப் பொறுப்பை இங்கிலாந்தில் உள்ள இந்தியத் தூதுவர் ஏற்று நடத்தி வந்திருக்கிறார்.

பிரிட்டிஷ் சர்க்காரிடம் இந்தியா மொத்தமாக நிறுத்தி வைத்திருக்கும் பணத்திலிருந்தே இன்னமும் இந்தப் 'பென்ஷன்'கள் தரப்படுகின்றனவாம்.

இந்தியத் தூதுவரின்......

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

தாமதம் கண்டு கோபங்கொண்டுள்ள இந்தியர்கள், இந்த உண்ணாவிரதத்தை மேற்கொண்டிருப்பதாகக் கூறுகிறது.

வற்புறுத்தியுங்கூட அவர்கள், உணவு உட்கொள்ள மறுத்துவிட்டார்களாம்!

விளைபொருள் உற்பத்தியைக் கட்டுப்படுத்த முயற்சி

சென்னை அமைச்சர் அறிவிப்பு

"நாட்டின் தேவையை உத்தேசித்தும், பாசனம், நிலவளம் ஆகியவைகளைப் பொறுத்தும், விவசாயப் பொருள் சாகுபடியை கட்டுப்படுத்தும் திட்டம் ஒன்றை அரசாங்கம் யோசனை செய்து வருகிறது; பரீட்சார்த்தமாக சில இடங்களில், இத்திட்டம் அமுலாக்கப்படும்,"

என்று, சென்னை சட்டசபையில், விவசாய மீன் இலாகா மானியக் கோரிக்கைகளுக்குப் பதிலளிக்கையில், அமைச்சர் பக்தவத்சலம் அறிவித்தார்.

"அரிசி விலைகள் அதிகம் குறைவதாக இருந்தால், அவசியமேற்பட்டால், அரசாங்கம் முன்வந்து அரிசியை வாங்கிக் கொள்ளும்" என்றும் அவர் அறிவித்தார்.

"தமிழ் புத்தாண்டுப் பிறப்பை, ஏழைகளுக்குப் பால் வழங்கும் தினமாகக் கொண்டாடுவதற்கு முயற்சிகள் நடைபெறுகின்றன; இதற்காகப் பல பொது நிறுவனங்களின் ஒத்துழைப்பு கோரப்பட்டுள்ளது; தொழிலாளர் வசிக்கும் பகுதிகளிலுள்ள குழந்தைகளுக்கு இலவசமாகப் பால் கிடைக்குமாறு செய்வதற்கு தொழிலாளர் சங்கங்கள் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும்" என்றும் அவர் கூறினார்.

திருத்தம்

சென்னை 1, 2, 3, 5—3—55 'நம் நாடு' இதழ்களில், தி. மு கழகத் தேர்தல் பற்றிய பொதுச்செயலாளர் அவர்களின் அறிக்கையில், முதல் ஐந்தாவது பாராவில், '1—3—55-ம் நாளிலிருந்து 31—4—55-ம் நாள் வரையில்' என்றிருப்பதை, '......30-4-55-ம் நாள் வரையில்' என்று திருத்தி வாசித்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம். (ஆ - ர்.)

இரா. நெடுஞ்செழியன்

சுற்றுப் பயணம்

மார்ச் 12: குளத்தூர்
13: நெல்லை
14: தென்திருப்பேரை
15: திருச்செந்தூர்
16: சேரன்மாதேவி
17: சாத்தான்குளம்
18: கோவில்பட்டி
19: விருதுநகர்
20: கோவை
21: சேலம்

தென்னாட்டில் இரும்புத் தொழிற்சாலை

மத்திய அரசாங்கத்தை சென்னை வேண்டியுள்ளதாம்

"தென்னாட்டில் ஒரு இரும்பு எஃகுத் தொழிற்சாலையை நிறுவுவதில் சென்னை சர்க்கார் 'ஆர்வம்' கொண்டிருக்கிறது; தக்க தருணத்தில் இது விஷயம் பற்றிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்,"

என்று அமைச்சர் பக்தவத்சலம், சென்னை சட்டசபையில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

"சேலத்தில் ஒரு இரும்புத் தொழிற்சாலையை நிறுவுவதைப் பரிசீலிக்கும்படி மத்திய சர்க்காரை சென்னை மாநில சர்க்கார் வற்புறுத்தியுள்ளது; நெய்வேலியில் கிடைக்கும் நிலக்கரியை இரயில் வண்டி மூலமாகச் சேலத்திற்கு அனுப்பலாமென இம்மாநில சர்க்கார் யோசனை கூறியுள்ளது. நிலக்கரித் திட்டத்தில் கரியமிலவாயு சக்திகொண்ட நிலக்கரி கிடைக்கத் தொடங்கி, அதன் சிக்கனம் பற்றி தெரிந்த பின்னர்தான் இதைக் கவனிக்க முடியுமென்று மத்திய சர்க்கார் அறிவித்துள்ளது"

மற்றொரு கேள்விக்கு அவர் பதிலளிக்கையில் சொன்னார்:—

"தென்னாட்டில் ஒரு இரும்பு எஃகுத் தொழிற்சாலை நிறுவுவது பற்றிய விஷயங்களை ஒரு நிபுணர் குழுவின் பரிசீலனையுடன் கவனித்து, அதை, அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தில் மத்திய சர்க்காரின் திட்டங்களில் ஒன்றாக்கி அமுல் நடத்துமாறு சென்னை சர்க்கார் கோரியுள்ளது; நெய்வேலி நிலக்கரி கிடைத்ததும் இதைப்பற்றிக் கவனிப்பதாக மத்திய சர்க்கார் கூறியுள்ளது."

நெய்வேலி திட்டம் பற்றி உறுப்பினர் ஒருவர் கேட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் சொன்னார்:—

"பழுப்பு நிலக்கரிப் பகுதிகளில் தண்ணீரை வெளியே இறைப்பதைக் கவனிப்பதற்காக 1954 டிசம்பர் இறுதியில் நிலக்கரிச் சுரங்க பூர்வாங்கத் திட்ட வேலை கைவிடப்பட்டுள்ளது; இதைச் செய்யாமல் சுரங்க வேலையைத் தொடர்ந்து செய்துகொண்டே போவது ஆபத்தை விளைவிக்கக் கூடியதாகும்; இதுவரையில் நிலக்கரிச் சுரங்கத்தில் 150 அடி ஆழம் வெட்டப்பட்டுள்ளது; 260 லட்சம் கனஅடி மண் தோண்ட வேண்டியிருந்த கால வரையறையாகிய 1955-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 31-ந் தேதி வரையில் 250 லட்சம் கன அடி மண் தோண்டப்பட்டுவிட்டது.

எம். என். கிருஷ்ணன் பார்வதி - திருமணம்

சென்னை, மார்ச் 12— நகைச்சுவை நடிகத் தோழர் எம். என். கிருஷ்ணன்—தோழியர் பார்வதி திருமணம், நேற்று சென்னையில் கலைவாணர் என். எஸ் கிருஷ்ணன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

தி மு கழகப் பொதுச் செயலாளர் அண்ணாதுரை, மற்றும் நடிகத் தோழர்கள்: எம் ஜி இராமச்சந்திரன், எஸ். எஸ். இராசேந்திரன், தோழர் ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ., ஆகியோர் மணமக்களை வாழ்த்திப் பேசினர். மாலை தேநீர் விருந்தும், இன்னிசையும் நடைபெற்றது. (ந நி.)

கழகக் கூட்டங்கள்

★

குளத்தூர்
அண்ணா திடலில்
12—3—55 இரவு 7 மணிக்கு
தலைவர்: கே. வி. கே. சாமி
பேசுபவர்:
இரா. நெடுஞ்செழியன்

★

இடைப்பாடி
ஆரம்பப் பள்ளியின் முன்பு
12—3—55 மாலை 6 மணிக்கு
தலைவர்: இரா. தாண்டவன்
பேசுபவர்:
க. அன்பழகன்

★

திருநெல்வேலி (சந்திப்பு)
ஆற்று மணலில்
13—3—55 மாலை 7 மணிக்கு
பேசுபவர்:
இரா. நெடுஞ்செழியன்

★

வேலூர்
கோட்டை வெளியில்
13—3—55 மாலை 6 மணிக்கு
தலைவர்: வி. எஸ். அரங்கநாதன்
பேசுவோர்:
ஈ. வெ. கி. சம்பத்
முகவை ஆர்.எஸ்.பாண்டியன்

★

கோட்டைக்குப்பம்
தி. மு. கழக திறப்பு விழா
கடைத்தெரு பள்ளிவாசலுக்கு அருகில்
13—3—55 மாலை 6 மணிக்கு
தலைவர்: நா. இராசசேகரன்
பேசுவோர்:
என். வி. நடராசன்
ஏ. கோவிந்தசாமி, எம் எல்.ஏ.
சித்தார்த்தன்

★

விருதம்பட்டு
பிள்ளையார் கோயில் வீதியில்
13—3—53 மாலை 6 மணிக்கு
பேசுபவர்:
சி. பி. சிற்றரசு

★

சேலம்
செவ்வாய்ப்பேட்டை
(8-வது வட்டம்) தி. மு. கழக முதலாவது ஆண்டு விழா
அப்புச் செட்டித் தெருவிலுள்ள கழகக் கட்டிடத்தின் முன்பு
13—3—55 காலை 10 மணிக்கு
தலைவர்: எஸ். மெய்யப்பா
பேசுவோர்:
க. அன்பழகன்
சத்தியவாணிமுத்து

* * *

13—3—55 மாலை 6 மணிக்கு
தலைவர்: ஈ. ஆர். கிருஷ்ணன்
பேசுவோர்:
க. அன்பழகன்
சத்தியவாணிமுத்து

சொற் பயிற்சிக் கூட்டங்கள்

12—3—55 மாலை 6½ மணிக்கு சென்னை 1-வது வட்ட கழக இல்லில், தோழர் மில்கர் தலைமையில், 'இலட்சிய வீரர்கள்' என்னும் பொருள் குறித்து தோழர்கள் பலர் பேசுவர்.

* * *

13—3—55 மாலை 6½ மணிக்கு, சென்னை, காசிமேடு, கவுஸ் மொகிதீன் தெருவில், பகுத்தறிவு மன்றச் சார்பில், தோழர் வி. கே சாமி தலைமையில் நடைபெறும் தோழர்கள் பலர் பேசுவர்.

* * *

12—3—55 மாலை 6 மணிக்கு, சென்னை, இராயபுரம் குறள் நெறிக் கழகத்தில், தோழர் க சிவா தலைமையில் தோழர்கள் பலர், பல தலைப்புகளில் பேசுவர்.

சென்னை 26-வது வட்ட தி. மு. கழக செயற் குழு உறுப்பினர்கட்கு

12—3—55 மாலை 6 மணிக்கு, சென்னை 26-வது வட்ட தி. மு. கழகக் கட்டிடத்தில் செயற் குழுக் கூட்டம் நடைபெறும். அதுபோது ஐந்தாண்டுத் திட்ட கண்டன நாளைக் குறித்தும், கிளைக் கழகத் தேர்தல் குறித்தும், வரவு-செலவு கணக்குள் பரிசீலனை குறித்தும் முடிவு செய்யப்படும்.

திருச்சி நகர தி. மு. கழக உறுப்பினர்கட்கு

13—3—55 காலை 10 மணிக்கு, திருச்சி, சிந்தாமணி தி. மு. கழக (கிளை) அலுவலகத்தில், திருச்சி நகர தி. மு கழக உறுப்பினர்கள் கூட்டம் தோழர் எம் எஸ் மணி தலைமையில் நடைபெறும். அது சமயம், பொதுக் குழு முடிவுப்படி கண்டன நாள் பொதுக்கூட்டம் நடத்தவும், புதிய தேர்தல் நடத்துகின்ற முறை பற்றியும் ஆலோசிக்கப்படும்.

பொன்மலை திராவிட வாலிபர் கழக உறுப்பினர்கட்கு

13—3—55 மாலை 5 மணிக்கு, பொன்மலைப்பட்டி தி. மு. கழக காரியாலயத்தில், பொன்மலை திராவிட வாலிபர் கழக உறுப்பினர்கள் கூட்டம் தோழர் ஜி பராங்குசம் தலைமையில் நடைபெறும். அது சமயம், 'எதிர்கால வேலையில் நமது கடமை' என்பதுபற்றி ஆலோசித்து முடிவு செய்யப்படும்.

வேலாயுதம் படிப்பக மூன்றாவது ஆண்டு விழா

12—3—55 காலை 9½ மணிக்கு, இடைப்பாடி வேலாயுதம் படிப்பகத்தில், தோழர் அ ஆறுமுகம் தலைமையில் நடைபெறும் தோழர்கள் க அன்பழகன், இரா. தாண்டவன், மு புதுமைவாணன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

ஓவியக் கண்காட்சி

13—3—55 மாலை 4 மணிக்கு, சென்னை, கோகலே மண்டபத்தில், சென்னை மாணவர் மன்றம் 23-ம் ஆண்டு நிறைவு விழாவின் ஓவியக் கண்காட்சி திறப்பு விழா நடைபெறும். 14—3—55 காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை கண்காட்சி நடைபெறும்.

திருமணங்கள்

13—3—55 காலை 9 மணிக்கு, பல்லாவரம், சுப்ரமணியர் கோவில் தெரு, 7-71 எண்ணுள்ள இல்லத்தில், தோழர் ஜி. செல்வராசன்—தோழியர் பி. உமையாதேவி திருமணம், தோழர் காஞ்சி கல்யாணசுந்தரம் தலைமையில் நடைபெறும்.

13—3—55 காலை 8½ மணிக்கு, விருதம்பட்டு தோழர் வி. நா. தங்கவேலன் இல்லத்தில், தோழர் வி. நா. மார்கபந்து—தோழியர் தனபாக்கியம் திருமணம், தோழர் சி. பி. சிற்றரசு தலைமையில் நடைபெறும். தோழர்கள் பலர் வாழ்த்துரை வழங்குவர்.

13—3—55 காலை 4½ மணிக்கு, வேலூர் அடுத்த சருகபத்தூரில், தோழர் கே. வி. ஏழுமலை—தோழியர் மரகதவள்ளி, தோழர் கே. கே. வேலு—தோழியர் வசந்தாபாய் திருமணங்கள், தோழர் பொ. வள்ளாலன் முன்னிலையில் நடைபெறும். தோழர்கள் மணிஎழிலன், வே. கண்ணன், கூத்தரசு, அ. கருத்தோவியம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

13—3—55 மாலை, சென்னை, சேத்துப்பட்டு மங்களபுரம், ஸ்டாலின் திடல் திறந்த வெளி அரங்கில், ஒரே சமயத்தில் 25 திருமணங்கள் சீர்திருத்த முறையில் நடைபெறும். இத்திருமணங்கள் தமிழ்நாட்டு பிரபல தலைவர்கள் முன்னிலையில் நடைபெறும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம்.ஏ,